# WA NOTIFY எப்படியாக வேலை செய்கிறது

கோவிட்-19 பரவுதலை தடுக்க உருவாக்கப்பட்ட புதிய முக்கியத்துவம் வாய்ந்த செயல்படுத்தும் கருவி WA Exposure Notifications. முககவசம் அணிந்திடுதல், சமூக இடைவெளியை கடைபித்தல், கூடிவரும் போது எண்ணிக்கை குறைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுதல் போன்று WANotify சமூகத்தினை பாதுகாத்திட பயன்படும் ஓர் எளிய செயல்படுத்தும்கருவி.

WA Notify ஸ்மார்ட்ஃபோன்கள் வழியாக, தனிநபரின் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளாமல், அவர்கள் கோவிட்-19 தொற்று பரவுதலுக்கு பாதுகாப்பின்றி இருந்திருக்கலாம் என்பதை எச்சரிக்கிறது. **இது முற்றிலும் தனி மறைவானது. நீங்கள் எங்கே போகிறீர்கள் நீங்கள் யார் என்பது தெரியாது அல்லது பின்தொடராது.**

இடர்காப்பின்மை குறித்து அதிக எண்ணிக்கை மக்கள் அறிவிப்புகளை பயன்படுத்தும் போது, பலன்கள் அதிகமாக கிடைப்பது ஆராய்ச்சியில் கண்டறியபட்டுள்ளது. வாஷிங்டன் தகவல் மாதிரிகள் ஆராய்ச்சி செய்த போது சிறிய எண்ணிகையில் WA Notify பயன்படுத்தும் போது கூட, அங்கு தொற்று பரவுவது மற்றும் உயிர் இழப்பு குறைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

## உங்கள் ஃபோனில் WA NOTIFY யினை சேர்க்கவும்

**iPhone ல்**

1. செட்டிங்ஸ்க்குச் செல்லவும்
2. வெளிக்காட்டுதலின் அறிவிப்பு Exposure Notification க்குச் செல்லவும்
3. "வெளிக்காட்டுதலின் அறிவிப்பினை கிளிக் செய்யவும்"
4. அமெரிக்க ஐக்கிய நாடு தெரிந்து எடுக்கவும்
5. வாஷிங்டன் தெரிந்து எடுக்கவும்

**ஆண்ட்ராயிடில்:**

1. ஆண்ட்ராயிட் ஃபோனில்:கூகிள் பிளே ஸ்டோர் க்குச் செல்லவும்
2. WA Exposure Notifications என்பதை தெரிந்து எடுத்ததும் எளிதில் செயலியை கண்டுபிடித்துக் கொள்வீர்கள்.
3. Washington Exposure Notifications செயலியை பதிவிறக்கம் செய்யவும்.

## WA NOTIFY யினை உங்கள் ஃபோனில் சேர்த்தவுடன்

இப்படியாக தான் அது செயல்பட்டு கோவிட்-19 தொற்று பரவுதல் தடுக்கப் பயன்படுகிறது.

**1**



WA Notify பயன்படுத்தி வரும் இரண்டு நபர் தொடர்பில் நேரெக்கமாக வந்தால், உங்கள் இருவரின் ஸ்மார்ட்ஃபோனும் புளூடூத் பயன்படுத்தி தொடர்பற்ற முறையில் குறியீடுகளைப் பரிமாறிக் **கொள்கின்றன இந்த குறியீடு முற்றிலும் பெயரில்லாதது, இடத்தினை பின் தொடராது அல்லது தனிநபரின் தகவல் எதையும் பரிமாறிக் கொள்ளாது.**

**2**




வாஷிங்டனில் யாரேனும் ஒருவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டால், சுகாதார துறை அவர்களை அணுகி, அவர்களிடம் WA Notify இருக்கிறதா என கேட்டறிந்து அவர்களுக்கு ஒரு சரிபார்க்கும் குறியீட்டை கொடுப்பார்கள்.

**3**



தொற்று இருப்பது உறுதி என அறிந்தவர் அந்த சரிபார்க்கும் குறியீட்டை WA Notify யில் உள்ளிடுவர். இது தன்னார்வ செயல் ஆகும்

**4**



ஃபோனில் WA Notify வைத்திருந்து கடந்த இரண்டு வாரத்திற்குள் தொடர்பில் வந்தவர்களுக்கு பெயரில்லாத ஒரு அறிவிப்பு அவர்கள் தொற்று பரவலுக்கு பாதுகாப்பின்றி இருந்திருக்கக் கூடும் எனச் சென்று சேரும்.

**5**




அறிவிப்பில் உங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்திட அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற தகவலுக்குரிய லிங்க் இருக்கும். அதில் யாருக்கு தொற்று கண்டறியபட்டது என்ற தகவலோ அல்லது எங்கே தொற்று பரவி இருக்க கூடும் என்ற தகவலோ இருக்காது.